ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.04.15 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 மாச்சு

## மாச்சில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் விரிவடைந்தன


**நாட்டில் தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட வலுவான மீளெழுச்சியை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் 2021 மாச்சில் தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் ஒன்பது மாதங்களிலேயே மிக உயர்ந்த அளவான 67.0 இனை அடைந்தது.** இதற்கு உற்பத்தி, புதிய கட்டளைகள் மற்றும் கொள்வனவு இருப்புக்களின் துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் புடவைகள், அணியும் ஆடைகள் துறைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஒட்டுமொத்த சுட்டெண்ணின் மேம்பாட்டிற்குப் பங்களித்தன. உணவு மற்றும் குடிபானங்கள் துறையின் தயாரிப்பிலுள்ள அநேக பதிலிறுப்பாளர்கள் எதிர்வரும் புத்தாண்டு பண்டிகைக் காலத்திற்கு முன்னர் 2021 மாச்சு காலப்பகுதியில் உயர்மட்ட விற்பனைகளையும் உற்பத்தியினையும் தாம் கொண்டிருந்தமையை எடுத்துக்காட்டியுள்ளனர். மேலும், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையிலிருக்கின்ற பதிலிறுப்பாளர்கள் பண்டிகைக்கால விடுமுறைகளை ஈடுசெய்யத்தக்க விதத்தில் தமது உற்பத்தியை அதிகரித்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அதேவேளை, கொள்வனவுகளின் இருப்புக்கள் துணைச் சுட்டெண் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகளில் காணப்பட்ட விரிவாக்கத்துடன் இசைந்துசெல்லும் விதத்தில் அதிகரித்தன. தொழில்நிலை துணைச் சுட்டெண்ணும் உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தது.

**கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 67.0** — 2021 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 7.6 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | பெப் | மாச்சு | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | 59.4 | 67.0 | + | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 60.6 | 73.9 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| உற்பத்தி | 61.7 | 72.9 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 52.2 | 56.4 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 58.3 | 72.3 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோகிக்கும் நேரம் | 63.9 | 53.7 | - | நீண்டு செல்லல், மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண் இம்மாத காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் நீண்டு காணப்பட்டது. அநேக பதிலிறுப்பாளர்கள் கப்பலேற்றலுடன் தொடர்பான பிரச்சனைகள் படிப்படியாகத் தீர்க்கப்பட்ட வருவதன் காரணமாக நிரம்பலர் விநியோக நேரத்தில் ஓரளவு தளர்வு நிலை காணப்படுவதனை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். எனினும், சரக்கு கட்டண வீதங்கள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையும் மூலப்பொருட்களின் அதிகரிக்கின்ற செலவுகளும் அவர்களது இலாப அளவில் மோசமான தாக்கத்தினை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நாட்டிற்குள்ளும் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளிலும் பொருளாதார நடவடிக்கைகளில் மேலும் மேம்பாடுகள் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் அடுத்த மூன்று மாதங்களில் மேம்பட்ட மட்டங்களில் தொடர்ந்தும் காணப்படும்.

### உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு

2021 மாச்சில் உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 55.0 கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது. இது பெப்புருவரியிலிருந்து 1.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றாகக் காணப்படுகிறது.

2021 மாச்சில் ஐக்கிய இராச்சியம், யூரோ வலயம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் தயாரிப்பு கொ.மு.சு உயர்ந்த வேகத்தில் அதிகரித்த வேளையில் இந்தியா, ருஷியா மற்றும் சீனாவின் அச்சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்தது.

மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிறல் 12, 2021 இல் உள்ளவாறு

*1* மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.

**2021 மாச்சில் பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 62.1 சதவீதத்தினால் உயர்வடைந்து பணிகள் துறை தொடர்ந்து நான்கு மாதங்களாக விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டியது.** இவ்வதிகரிப்பிற்கு புதிய வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவாக்கங்களே பக்கபலமாக விளங்கின.

2021 மாச்சில் பணிகள் துறைகளிலுள்ள புதிய வியாபாரங்கள் அதிகரித்தன. குறிப்பாக, நிதியியல் பணிகள், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத் துறைகளில் மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

பெரும்பாலும், அனைத்து துறைகளிலும் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளின் காரணமாக தொடர்ந்து நான்காவது மாதமாக, பணிகள் துறைகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் 2021 மாச்சில் அதிகரித்தன. முக்கியமாக, பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், இம்மாத காலப்பகுதியில் நிதியியல் பணிகள் துணைத் துறை மேலும் முன்னேற்றங்களைக் காட்டியது. பண்டிகைக் காலம் என்பதனால் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை மற்றும் போக்குவரத்துத் துறைகளும் மேலும் விரிவடைந்தன. மேலும், ஏனைய தனியாள் பணிகள் துணைத் துறையும் 2021 மாச்சில் அதிகரிப்பினைக் காட்டியது. அதேவேளை, க.பொ.த சாதாரணம் மற்றும் க.பொ.த உயர்தர பரீட்சைகளைத் தொடர்ந்து உயர் கல்விக்கான அதிகரித்த கேள்வி காரணமாக கல்வித் துணைத் துறை தொடர்ந்தும் விரிவடைந்தது.

வியாபார நடவடிக்கைகள் வளர்ச்சிடைந்து வருவதனைத் தொடர்ந்து புதிய ஆட்சேர்ப்புக்களின் காரணமாக, தொடர்ந்து 13 மாத வீழ்ச்சியின் பின்னர் முதற்றடவையாக 2021 மற்றும் தொழில்நிலை அதிகரித்தது.

கொவிட்-19 தொடர்பான சுகாதாரக் கரிசனைகளின் காரணமாக முன்னர் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட அலுவலர் மட்டங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் இரண்டாவது மாதமாக 2021 மாச்சில் நிலுவையிலுள்ள பணிகள் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | பெப் | மாச்சு | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.5** | **62.1** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 54.1 | 64.7 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 62.8 | 73.4 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 49.5 | 52.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| நிலுவையிலுள்ள பணிகள் | 46.8 | 49.4 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 69.6 | 70.7 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

சிங்கள தமிழ் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகைக்காலம் என்பனவற்றின் காரணமாக வளர்ச்சி வாய்ப்புக்கள் உருவாகும் என்ற நம்பிக்கைதரும் எதிர்பார்ப்புக்களின் பக்கபலத்துடன் 2021 மாச்சில் அடுத்த மூன்று மாதங்களான வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்தன.

கொ.மு.சு
சுட்டெண் பெறுமதி
62.1

2021 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 5.6 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

உலக தோற்றப்பாடு:
பணிகள் கொ.மு.சு

2021 மாச்சில் உலகளாவிய பணிகள் கொ.மு.சுட்டெண் 2021 பெப்புருவரியின் 52.8 இலிருந்து 54.7 இற்கு அதிகரித்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் மேலும் விரிவாக்கம் ஏற்படுவதற்கான சமிக்ஞைகளைக் காட்டியது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பனவற்றின் கொ.மு.சு பணிகள் 2021 மாச்சில் அவற்றின் பணிகள் துறைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் விரிவடைந்தமையை எடுத்துக்காட்டிய வேளையில் யப்பான் அச்சுட்டெண் மோசமடைந்தமையை எடுத்துக்காட்டியது.

(மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிறல் 15, 2021 இல் உள்ளவாறு)

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.